பெரியார் பல்கலைக்கழகம்
**PERIYAR UNIVERSITY**
Salem – 636011, Tamil Nadu, India
NAAC **A++** Grade -State University - NIRF Rank 59, NIRF Innovation Band of 11-50

பதிவாளர்

பெ.ப/க.சா.வ-4/BTA & BRA-2022-23/23F84073/023806/2023 நாள்:27.03.2024

# சுற்றறிக்கை

பெறுதல்

பெரியார் பல்கலைக்கழக இணைவுப்பெற்ற அனைத்து கல்லூரி முதல்வர்களுக்கு

ஐயா/அம்மையீர்,

பொருள்: பெரியார் பல்கலைக்கழகம் சேலம் - 2023-2024-ஆம் கல்வியாண்டு - பெரியார் பல்கலைக்கழக இணைவுப்பெற்ற கல்லூரிகள் - சிறந்த ஆசிரியர் விருது, சிறந்த ஆராய்ச்சியாளர் விருதுக்கான விண்ணப்பம் வரவேற்கப்பட்டமை – விருதுக்கு விண்ணப்பிக்க கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளமை - தகவல் தெரிவித்தல் - தொடர்பாக.

பார்வை:
1. இதே எண் கொண்ட இவ்வலுவலக சுற்றறிக்கை நாள்: 06.12.2023
2. இதே எண் கொண்ட இவ்வலுவலக குறிப்பாணை நாள்: 21.03.2024

*******

பார்வை (1)-இல் கண்டுள்ள இவ்வலுவலக சுற்றறிக்கையின் தொடர்ச்சியாக, பெரியார் பல்கலைக்கழக இணைவுப்பெற்ற கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு சிறந்த ஆசிரியர் விருது, சிறந்த ஆராய்ச்சியாளர் விருதுகளுக்கு விண்ணப்பிக்க இறுதி நாளாக 15.03.2024 என நிர்ணயம் செய்யப்பட்டது. தற்போது மேற்படி விருதுகளுக்கு விண்ணப்பிக்க இறுதி நாளாக 05.04.2024 அன்று வரையில் கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது என பார்வை (2)-இல் கண்டுள்ள குறிப்பாணையின்படி தெரிவிக்க பணிக்கப்பட்டுள்ளேன்.

மேலும், மேற்படி விருதுகளுக்கான விண்ணப்ப கட்டணமாக ரூ.1000+ 18% GST- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இவ்விண்ணப்பக் கட்டணம் ரூ.1180/-ஐ **"The Registrar, Periyar University, Salem-11"** என்ற பெயரில் **"சேலத்தில்"** மாற்றதக்க வங்கி வரையோலையாகவோ அல்லது பெரியார் பல்கலைக்கழக வளாகத்திலுள்ள கனரா வங்கியில் கணக்கு எண் 8450101000001-இல் செலுத்தி அச்செலுத்துச்சீட்டுடன் மற்றும் விண்ணப்பத்துடன் **"பதிவாளர் அவர்கள், பெரியார் பல்கலைக்கழகம், சேலம் - 636011** என்ற முகவரிக்கு **05.04.2024** அன்று மாலை 5.00 மணிக்குள் இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பு: **இவ்விருதுக்கான விண்ணப்பம் பெரியார் பல்கலைக்கழக வலைத்தளத்திலிருந்து (www.periyaruniversity.ac.in) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.**

27/3/24

பதிவாளர்

இணைப்பு: பார்வை (1)-இல் கண்டுள்ள இவ்வலுவலக சுற்றறிக்கையின் நகல்.